**தலைப்பு 307 - மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களம் தொடர்பான கணக்காய்வாளர் அதிபதி அறிக்கை 2017 ஆம் ஆண்டு**

---

2017 ஆம் ஆண்டு 32 ஆம் இலக்க ஒதுக்கீட்டு (திருத்திய) சட்டத்தால் திருத்தம் செய்யப்பட்ட 2016 ஆம் ஆண்டு 24 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தில் முதலாவது அட்டவணையிலும் மூன்றாவது அட்டவணையிலும் குறிப்பிடப்பட்டுள்ள தலைப்பு மற்றும் விடய இலக்கத்திற்கமைவாக ஒதுக்கீட்டுக் கணக்கு, கணக்கிணக்ககூற்று மற்றும் வருடாந்த வரவு செலவு மதிப்பீட்டில் 3.1.1 மற்றும் 3.1.2 ஆகிய அட்டவணைகளில் உள்ளடக்கப்பட்டுள்ள வருமான குறியீடுகளுக்கு ஏற்புடையதாக 04 வருமான கணக்குகளும், மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களத்தால் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டது. அந்தக் கணக்குகளிலும் கணக்கிணக்கக் கூற்றுகளிலும் வெளிப்படுத்தும் நிதி முன்னேற்றம் மற்றும் பிரதான பணிகளின் செயலாற்றுகை என்பன இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) உறுப்புரை பிரகாரம் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது.

## 1.2 பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரது கணக்கீட்டு நெறிமுறை தொடர்பான பொறுப்பு

---

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதி ஒழுங்குவிதிக் கோவையில் நிதி ஒழுங்குவிதி 124 இன் பிரகாரம் அரசிறை சேர்த்தலும், அரசாங்கத்தின் பிற பணங்களைச் சேர்த்தலும் மற்றும் அரசாங்கத்தின் எல்லா நிதி நடவடிக்கைகளை மேற்பார்வை செய்தல் தொடர்பான பொது கண்காணிப்பும் நிதி அமைச்சரின் பொறுப்பாகும். ஆகவே அவரால் அந்த பொறுப்பினை நிறைவேற்றும் பொருட்டு நிதி ஒழுங்குவிதிகள் 124(2) பிரகாரம் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர்களை நியமனம் செய்யப்பட்டுள்ளது. நிதி ஒழுங்குவிதி 125(1)(அ) இன் பிரகாரம் திணைக்களத்து தலைவர் தமது திணைக்களத்தின் சகல விதமான நிதிக் கொடுக்கல்வாங்கல்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோத்தராவதுடன், அரசிறைக் கணக்கீட்டு உத்தியோகத்தரை திறைசேரியால் நியமனம் செய்யப்பட்டுள்ளது. பாராளுமன்றத்தால் அங்கீகரிக்கப்பட்ட எல்லைக்குள் தமது கடமைப்பொறுப்புகளை நிறைவேற்றப்பட்டு சமர்ப்பிக்கப்படும் கணக்கீட்டு மற்றும் கணக்கிணக்க கூற்றுகள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பில் 148, 149, 150 மற்றும் 152 உறுப்புரைகளும், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரசாங்கத்தின் நிதி ஒழுங்குவிதிகள் மற்றும் நிருவாக ஒழுங்குவிதிகளுக்கமைவாக பேணிச் செல்லுதல், தயாரித்தல், நியாயமான வகையில் சமர்ப்பிப்பதற்கு ஏற்புடையதான உள்ளக கட்டுப்பாடுகளை திட்டமிடல், நடைமுறைப்படுத்தல் மற்றும் அவற்றை பேணுதலும் இந்த பொறுப்புகளுள் உள்ளடங்கும்.

## 1.3 கணக்காய்வு விடயவெல்லை

---

தலைப்பு 307 - மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களத்தினால் 2017 ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடையும் ஆண்டுக்கான நிதிசார் மற்றும் பௌதீக செயலாற்றுகை தொடர்பில் திட்டமிடல், அரச செலவினங்கள், அரச வருமானங்கள், மனித மற்றும் பௌதீக வளங்களை முகாமைத்துவம் செய்தல், உள்ளக கட்டுப்பாட்டு ஏற்பாடுகளை பயன்படுத்தல், சட்டதிட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகள் என்பவற்றுக்கு ஒழுங்கமைதல், புத்தகங்கள், ஆவணங்கள், அறிக்கைகள் மற்றும் கணக்கிணக்கக் கூற்றுகளை இற்றைப்படுத்தி பேணுதல், கணக்குகளை தயாரித்து காலத்திற்கேற்றவாறு சமர்ப்பித்தல், செயலாற்றுகை சுட்டிகளை அடிப்படையாகக்கொண்டு சம்பந்தப்பட்ட தரப்புகளிடம் செயலாற்றுகை அறிக்கைகளை வழங்குதல் தொடர்பாக இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசில் அரசியலமைப்பின் 154(1) உறுப்புரையில் உள்ளடக்கிய ஏற்பாடுகளின்கீழ் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. கணக்கீடுகள் மற்றும் கணக்கிணக்கக் கூற்றுகள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புகள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புகள், கணக்காய்விற்கு சமர்ப்பித்த திட்டமிடல், கணக்கீடுகள், கணக்கிணக்கக் கூற்றுகள் மற்றும் செயலாற்றுகை அறிக்கைகள் பற்றிய மீளாய்வுகள் அத்துடன் கொடுக்கல்வாங்கல்களில் மாதிரிகள் தொடர்பான உறுதிப்பாடுகள் பரிசோதனைகளை அடிப்படையாகக் கொண்டுள்ளன. அந்த மீளாய்வு, பரிசோதனைகளின் விடயவெல்லை மற்றும் போதியளவு என்பன எனக்கு கிடைக்கப்பெற்றுள்ள அலுவலக பதவியணி, ஏனைய வளங்கள், கால அவகாசம் போன்ற எல்லைகளுக்குள் இயன்றவரை விரிவான கணக்காய்வை மேற்கொள்ள முடியுமானவாறு தயாரிக்கப்பட்டதாகும்.

## 1.4 கணக்காய்வு அவதானிப்பு

2017 ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடையும் ஆண்டுக்காக 307 செலவு தலைப்பு தொடர்பாக மோட்டார் வாகன திணைக்களத்தால் மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வில் வெளிப்படுத்திக்கொண்ட கணக்காய்வு அவதானிப்புகள் மேற்படி 1.3 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் விபரமாக குறிப்பிடப்பட்டுள்ளது. அந்த அவதானிப்புகளிலிருந்து போதியளவு மற்றும் முக்கியமானதுமான கணக்காய்வு அவதானிப்புகளை, இவ்வறிக்கையில் 2.1 பந்தியிலிருந்து 2.17 வரையிலான பந்திகளில் குறிப்பிடப்பட்டுள்ளது. நிதி நிருவாகத்தில் போதியளவினை உறுதிப்படுத்தும் வகையில் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதி ஒழுங்குவிதி கோவையில் 128 இல் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளை நிறைவேற்றும்போது வெளிப்படுத்திக்கொண்ட, பின்வரும் குறிப்பில் சாரம்சப்படுத்தி காட்டப்பட்டுள்ள கணக்காய்வு அவதானிப்புகளுக்கமைவாக கணக்கீட்டு உத்தியோகத்தராக தமது கணக்கீட்டு நெறிமுறைகளை திருப்திகரமாக நிறைவேற்றியிருந்தமை அவதானிக்கப்பட்டது.

| **நிதி ஒழுங்குவிதி 128 ஏற்பாடுகள் - கணக்கீட்டு உத்தியோகத்தரின் கணக்கீட்டு நெறிமுறை** | | **பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் / கணக்கீட்டு உத்தியோகத்தர் அந்த ஏற்பாடுகளுக்கு இணங்கியொழுகாமை** | **அவதானிப்பு உள்ளடக்கிய அறிக்கையில் பந்தி தொடர்** |
|---|---|---|---|
| 128(1)(அ) | அனுமதித்த முயற்சிகளுக்கு நிதி ஏற்பாடு அளிக்கையில் பாராளுமன்றத்துக்கு இருந்த எண்ணங்களுக்கும் அரசாங்க கொள்கைக்கும் மதிப்புக் கொடுத்து அவரின் திணைக்கள வேலைகள் திட்டமிடப்பட்டு உரிய காலத்தில் நிறைவேற்றப்படுகின்றன எனவும், அவ்வாண்டுக்கென விதிக்கப்பட்டுள்ள வேலைத்திட்டத்தை நிறைவேற்றுவதற்கும் அல்லது குறிப்பிட்டுள்ள இலக்கை எய்துவதற்கும் அல்லது இவ்விரண்டிற்கும் முயற்சி செய்யப்படுகின்றதெனவும் | 1. செயற்றிட்டம் சரியாக தயாரிக்கப்படாமை.<br>2. ஆவணப் பதிவுகள் மற்றும் புத்தகங்கள் என்பவற்றை பேணிச் செல்லப்படாமை | 2.1.2<br>2.13 |

| | | | |
|---|---|---|---|
| 128(1)(ஆ) | தனது திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டுக்கும் கணக்கீட்டு முறைக்குமுள்ள ஒழுங்குகள் திறம்படவுள்ளனவெனவும், தேவைப்படும்போது அவை அரசாங்க வருமதிகளையும், வருமதிகளை ஒழுங்காக, முற்றாக உடனடியாகச் சேகரித்தலையும், பெற்ற பணங்களுக்கு கணக்கு வைத்தலையும், அரசாங்கத்தின் சார்பில் செலவுகளை அனுமதித்தலையும் ஆற்றப்படும் சேவைகளையும் வழங்கு பொருட்களையும் மேற்பார்வை செய்து அவற்றை பரிசோதித்தலையும் அவற்றுக்கு அரசாங்க நிதியிலிருந்து உடனடியாகச் சரியாகக் கொடுப்பனவு செய்தலையும் சரிவர உறுதிப்படுத்தலுக்கும் போதியளவு ஏற்பாடு செய்யப்படுகின்றன எனவும் | 1. பொது மக்களுக்கு சேவை நிறைவேற்றுவதில் காணப்படும் குறைப்பாடுகள் | 2.8 |
| 128(1)(இ) | அரசாங்கத்தின் நிதி ஒழுங்குவிதிகளையும் பிற குறைநிரப்பு அறிவுறுத்துரைகளையும் தனது திணைக்களம் கடைபிடிக்கின்றதெனவும், தேவையான விடயத்தில் அவை திணைக்கள அறிவுறுத்துரைகளால் குறைநிரப்பப்படுகின்றனவெனவும் | 1. ஆவணப் பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் என்பவற்றை பேணிச் செல்லப்படாமை | 2.13 |
| | | 2. இணங்கியொழுகாமை | 2.14 |
| 128(1)(ஈ) | பெறுகை, கொடுப்பனவு அத்துடன் மற்றும் விடயங்கள் பற்றி போதிய உள்ளகக் கண்காணிப்பு பேணப்படுவதுடன், காலத்துக்குக் காலம் பரிசீலிக்கப்படுகின்றதெனவும் | 1. வருமானக் கணக்குகளில் குறைப்பாடுகள் | 2.10 |
| | | 1. அரசாங்க அலுவலர்களின் முற்பணக் கணக்கில் குறிப்பிடப்பட்டுள்ள குறைப்பாடுகள் | 2.11 |

| | | | |
|---|---|---|---|
| 128(1)(உ) | அரசாங்கத்துக்குச் சொந்தமான அல்லது அதன் கட்டுக்காப்பிலுள்ள பணம், பண்டங்கள், சாதனங்கள் பிற சொத்துக்கள் ஆகியவற்றைப் பாதுகாத்துப் பேணுவதற்கு போதியளவிலும் முறையாகவும் ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கின்றனவெனவும், இவை காலத்துக்குக் காலம் சரிபார்க்கப்படுகின்றவெனவும், இவை தீர்வு செய்யப்படும்போது அத்தகைய தீர்வு செய்தல் விதிக்கப்பட்டுள்ள ஒழுங்குவிதிகளுக்கும் அறிவுறுத்தல்களுக்கும் இணங்கவுள்ளனவெனவும் | 1. சொத்துக்கள் முகாமைத்துவத்தில் குறைப்பாடுகள் | 2.3 |
| 128(1)(ஊ) | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரால் அல்லது திறைசேரியால் கேட்கப்படும் அத்தகைய தகவல், கூற்றுகள், விவர அறிக்கைகள் ஆகியன சரியாகவும், உடனடியாகவும் கொடுக்கப்படுகின்றனவெனவும். | 1. செயற்றிட்டம் சரியாக தயாரிக்கப்பட்டிருக்க வில்லை | 2.1.2 |
| 128(1)(எ) | அரசாங்கத்திற்கு கிடைக்கப்பெற வேண்டியவைகளை சேகரித்தல் தொடர்பான முன்னேற்றங்களை காட்டும் அறிக்கைகளை தினம்தோறும் பிரதான கணக்கீட்டு அலுவலரிடம் அனுப்பபடுகின்றதெனவும். | 1. வருமானக் கணக்குகள் தொடர்பாக | 2.10(அ) |
| | | 2. அரசாங்க அலுவலர்களின் முற்பணக் கணக்கு தொடர்பாக | 2.11 |
| 128(1)(ஏ) | நிலுவையாகவுள்ள வருமதிகளை அறவிடுவதற்கு விசேட ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளனவெனவும், அத்தகைய வேலைக்கென ஒதுக்கப்பட்ட உத்தியோகத்தர்கள் நிலுவைகள் சம்பந்தமாகவும் அவைகளை விரைவில் அறவிடுவதற்கு எடுத்த நடவடிக்கைகள் சம்பந்தமாகவும் காலாண்டுக்கொருமுறையாவது அல்லது வேறு வழியில் பணிக்கப்பட்டவாறு தனக்கு அறிவிக்கின்றார்கள் எனவும், | 1. வருமானக் கணக்குகளில் உள்ள குறைப்பாடுகள் | 2.10(அ) |
| | | 2. அரசாங்க அலுவலர்களுக்கு முற்பணக் கணக்கில் உள்ள நிலுவை கடன் மீதியை அறவிடுதல் | 2.11 |
| 128(1)(ஐ) | அரசாங்க அலுவல்களின் கொடுக்கல்வாங்கலில் எதிர்பார்க்கப்படும் சிக்கனம், திறமை, ஒழுக்கமுடமை, நேர்மை ஆகியவற்றிற்கு உரிய மதிப்புக் கொடுத்துத் தனது திணைக்கள முயற்சிகள் | 1. கருத்து வேறுபாடுகள் தொடர்பான கொடுக்கல்வாங்கல் | 2.4 |

| | | | |
|---|---|---|---|
| | மேற்கொள்ளப்படுகின்றனவெனவும், (இதன்போது சிக்கனம் என்பதில் பொருள்படுவது, வெறுமனே மதிப்பிடப்பட்ட செலவினை மேற்கொள்ளுதல் மட்டுமல்ல , செலவிடப் படும் தொகையானது, அரசாங்கத்திற்கு ஆகக்கூடிய பெறுமதியை கிடைக்கின்றது என்பதை உறுதிப்படுத்தல்) | | |
| 128(1)(க) | கணக்கீட்டு உத்தியோகத்தராகப் பொறுப்பேற்றிருக்கும் செலவுத் தலைப்பின் ஒவ்வொரு நிகழ்ச்சித்திட்டம் சம்பந்தமாக நிதியாண்டு முடிவில் ஓர் ஒதுக்கீட்டுக் கணக்கு, பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்குச் சமர்ப்பிக்கப்படுகின்றது எனவும், (நி.ஒ.வி 150 ஐ பார்க்கவும்) | 1. ஒதுக்கீட்டு கணக்கில் குறிப்பிடப்பட்டுள்ள குறைப்பாடுகள் | 2.9(அ) |
| 128(1)(ச) | உத்தியோகத்தர்களது.᛬. பணியாளர்களது தாமதம், கவனையீனம், தவறு மற்றும் மோசடி காரணமாக அரசாங்கத்திற்கு ஏற்படும் இழப்புகள் தொடர்பில் நிதி ஒழுங்குவிதி 103 தொடக்கம் 108 வரையிலான ஒழுங்குவிதிகளில் விதிக்கப்பட்டுள்ள நடைமுறை விதிக் கோவையை கணக்கீட்டு உத்தியோகத்தர்களால் கடைபிடிக்கப்பட்டு, நிதி ஒழங்குவிதிகள் 156(1) இன் பிரகாரம் அத்தகைய இழப்புகளுக்குப் பொறுப்பான உத்தியோகத்தர்கள்.᛬.பணியாளர்கள் மீது மிகை விதிப்பு விதிப்பதற்கும், (பொறுப்பு கூறும் பொருட்டு போதியளவிலான ஏற்பாடுகளை மேற்கொள்ளுதல் விசேடமாக அவரது கடமைப் பொறுப்பாகும்.) | 1. நிதி முறைகேடுகள் தன்மையிலான கொடுக்கல்வாங்கல் | 2.5 |

## 2. போதியளவிலானதும் முக்கியமானதுமான கணக்காய்வு அவதானிப்புகள்

### 2.1 செயலாற்றுகை

### 2.1.1 திணைக்களத்தின் நோக்கு மற்றும் செயற்பணி

2017 ஆம் ஆண்டு வருடாந்த வரவு செலவு மதிப்பீடு, செயற்றிட்டம், செயற்பணி கூற்று மற்றும் பிரதான கடமைப்பொறுப்புகள் பிரகாரம் திணைக்களத்தின் செயலாற்றுகை தொடர்பான அவதானிப்புகள் பின்வருமாறாகும்.

**(அ) வாகனங்களின் பதிவு, உரித்துகளை கையளித்தல் மற்றும் சாரதி அனுமதிப் பத்திரங்களை வழங்குதல்**

திணைக்களத்தின் பிரதான கடமைப் பொறுப்புகளான மோட்டார் வாகனங்களின் பதிவு, வாகனங்களின் உரித்துகளை கையளித்தல் மற்றும் சாரதி அனுமதிப் பத்திரங்களை வழங்கும் முன்னேற்றம் தொடர்பாக கடந்த ஆண்டின் முன்னேற்றத்துடன் ஒப்பிட்டு பின்வருமாறு காட்டப்பட்டுள்ளது.

| பணி | அளவு | | அதிகாரித்தல்/ (குறைதல்) | சதவீதம் |
|---|---|---|---|---|
| | 2017 | 2016 | | |
| மோட்டார் வாகனங்களின் பதிவு | 451,653 | 493,328 | (41,675) | (8.45) |
| வாகன உரித்துகளை கையளித்தல் | 708,211 | 491,788 | 216,423 | 44 |
| புதிய சாரதி அனுமதிப் பத்திரங்களை வழங்குதல் | 369,033 | 358,560 | 10,473 | 2.92 |

**(ஆ) கைத்தொழில் சேவைகளை வழங்குதல்**

கணினி சார்ந்து சாரதி அனுமதிப் பத்திரங்களின் பொருட்டு எழுத்திலான பரிசோதனை நடாத்தல் மீளாய்விற்கான ஆண்டில் மேற்கொள்ளப்படவில்லை. 2018 ஆம் ஆண்டில் வேரஹர அலுவலகத்தில் மட்டும் ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன், 24 பிரதேச அலுவலகங்களில் நடைமுறைப்படுத்தியிருக்கவில்லை. சாரதி பாடசாலைகளை மேற்பார்வை செய்தல் திருப்திகரமான மட்டத்தில் இருக்கவில்லை.

**(இ) வாயு வெளியேற்ற நிலைமையை ஒழுங்குப்படுத்தல்**

(i) வாயு மாசடைத்தல் ஏற்பட்டுள்ள துறைகள் மற்றும் பிரதேசங்கள் என்பவற்றை அடையாளம் காணுவதற்கு சில நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்தியிருப்பினும், பொதுமக்களுக்கு ஏற்பட்டுள்ள சுகாதார ரீதியான தாக்கங்களை குறைப்பதற்கு போதியளவிலான செயற்பாடுகளை நடைமுறைப்படத்தியுள்ளதாக அவதானிக்கப்பட முடியவில்லை.

(ii) 2008 ஆம் ஆண்டு தொடக்கம் 2017 ஆம் ஆண்டு வரை மேற்கொண்டிருந்த 31,329,486 வாயு வெளியேற்ற பரிசோதனைகளில் 5,802,365 அல்லது நூற்றுக்கு 19 வீதம் அளவிலான வாயு பனிசோதனைகள் முன்னரான சந்தர்ப்பத்தில் திருப்தியளிக்கவில்லை. 2008 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளில் மேற்கொண்ட வாயு வெளியேற்றம் தொடர்பான பரிசோதனைகளில் திருப்தியளிக்காத சதவீதம் நூற்றுக்க 13 தொடக்கம் 26 வரையிலான எல்லைக்குள் இருந்தது.

(iii) புகை பரிசோதனை நிறுவனம்மூலம் மேற்கொள்ளப்படும் பரிசோதனை தரவுகள், தகவல் மற்றும் தொடர்பாடல் தகவல் தொழில்நுட்ப நிறுவனத்தில் (ICTA) தரவுகள் களஞ்சியத்தில் களஞ்சியப்படுத்தியிருப்பினும், அத் தகவல்களை உபயோகப்படுத்தி பிரதான நகரங்களுக்கு பிரவேசிக்கும் வாகனங்களால் ஏற்படும் வாயு மாசடைதலின் தாக்கங்களை குறைத்தல், இறக்குமதி செய்யப்பட வாகனங்களின் வகை மற்றும் வகுப்பு தொடர்பான கொள்கையுடனான திர்மானங்களை மேற்கொள்வதற்கு தேவையான பரிந்துரைகளை வழங்குதல், வாகனங்களை உபயோகப்படுத்திய ஆகக்கூடிய காலவெல்லையை நிருணயித்தல் போன்ற பகுப்பாய்வு பணிகளை உபயோகப்படுத்தியிருந்ததாக அவதானிக்கப்பட முடியவில்லை.

### 2.1.2 திட்டமிடல்

திணைக்களத்தால் தயாரிக்கப்பட்டிருந்த செயற்றிட்டம்படி மீளாய்விற்கான ஆண்டில் நிறைவேற்றிய 11 பிரதான கடமைப் பொறுப்புகளை அடையாளம் காணப்பட்டுள்ளதுடன், திணைக்களம் மற்றும் அதன்கீழ் தாபிக்கப்பட்டுள்ள 02 நிதியங்களில் எதிர்பார்க்கப்பட்ட பெறுபேறுகளை பெற்றுக்கொள்வதற்காக தயாரிக்கப்பட்டிருந்த செயற்றிட்டம் தொடர்பில் பின்வரும் குறைப்பாடுகளை அவதானிக்கப்பட்டது.

(அ) திட்டத்தில் திணைக்களத்தின் பிரதான பணிகள் பிரதிநிதித்துவப் படுத்தவில்லையென்பதுடன். ஒவ்வொரு வருமான குறியீடுகளின் பொருட்டு வருமானங்களை சேகரிக்கும் நடவடிக்கைகள் தொடர்பான திட்டங்களை உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) வரவு செலவு மதிப்பீடுகளில் மூலதன செலவினம் பொருட்டு 1230.8 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டிருப்பினும், செயற்றிட்டத்தில் 343 மில்லியன் ரூபா பெறுமதியிலான செயற்பாடுகளை மட்டும் காட்டப்பட்டிருந்தது.

### 2.1.3 கடமைப் பொறுப்புகளை நிறைவேற்றப்படாமை

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(அ) செயற்றிட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள கடமைப்பொறுப்புகளை நிறைவேற்றப்படாமை**

வருடாந்த செயற்றிட்டத்தின்படி மீளாய்விற்கான ஆண்டில் திணைக்களத்தால் 06 கடமைப் பொறுப்புகளை நிறைவேற்றப்பட வேண்டுமாயினும். அதில் இரண்டு கடமைப் பொறுப்புகளை நிறைவேற்றப்படவில்லை. அவ்வாறு நிறைவேற்றப்படாத ஒரு பிரதான அலுவலான ஈ மோட்டரிங் கருத்திட்டம் பொருட்டு 135 மில்லியன் ரூபாவிலான ஒதுக்கீடு மேற்கொள்ளப்பட்டிருந்தது.

**(ஆ) கருத்திட்டங்களை நிறைவேற்றுவதில் தாமதங்கள்**

திணைக்களத்தால் பின் குறிப்பிடப்படும் கருத்திட்டங்களை நிறைவேற்றுவதில் காணப்பட்ட தாமதங்கள்

| கருத்திட்டம் | மதிப்பிடப்பட்ட செலவினம் | ஆரம்பிக்கப்பட்ட திகதி | முடிவுறுத்தப்பட வேண்டிய திகதி | முடிவுறுத்திய திகதி | 2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் செலவினம் | தாமதத்திற்கு காரணம் |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா. மில்லியன் | | | | ரூபா. மில்லியன் | |
| ஈ - மோட்டரிங் கருத்திட்டம் | 5000 | 2016.08.31 (பெறுகை செயற்பாடு) | - | - | 0.28 | முறையான படிநிலைகளை மேற்கொள்ளப்படாமை |
| ஆவணக்கூடத்தை நிருமாணித்தல் | 87 | 2016.03.26 | 2016.11.30 | 2017.11.30 | 98 | - அதே - |
| ஆவணகூடத்தில் அலுமாரிகளை பொருத்துதல் | 127 | 2017.01.12 | 2017.04.12 | 2018.03.27 | 85 | - அதே - |
| சாரதி பரிசோதனை, ஓடுபாதை மற்றும் வாகன தரிப்பிடங்களை நிருமாணித்தல் | 93 | 2015.07.15 | 2015.07.15 | முடிவுறுத்தப்படவில்லை | தகவல்கள் வழங்கப்படவில்லை | -அதே- |

**2.2 பெறுகை செயற்பாடுகள்மூலம் வழங்கல் மற்றும் சேவைகளை பெற்றுக்கொள்ளுதல்**

**பெறுகைகளை திட்டமிடல்**

திணைக்களத்தால் அரசாங்கத்தின் பெறுகை வழிகாட்டல்களின்படி நடவடிக்கைகளை மேற்கொண்டு வழங்கல் மற்றும் சேவைகளை பெற்றுக்கொள்வதற்கு 2,580.98 மில்லியன் ரூபா ஒதுக்கீடு ஏற்பாடு செய்திருந்ததுடன், அதில் 2,557.45 மில்லியன் ரூபாவிலான ஒதுக்கீடை மட்டும் உபயோகப்படுத்தப்பட்டிருந்தது.

**2.3 சொத்துக்களின் முகாமைத்துவம்**

திணைக்களத்தின் சொத்துக்கள் தொடர்பில் மேற்கொண்ட மாதிரி கணக்காய்வு பரிசோதனையில் பின்வரும் குறைப்பாடுகளை அவதானிக்கப்பட்டன.

**(அ) வாகனங்களின் உபயோகம்**

**எரிபொருள் செலவழிவை பரிசோதனை செய்யாமை**

2016 திசெம்பர் 29 ஆந் திகதிய மற்றும் 30/2016 ஆம் இலக்க அரசாங்க நிருவாக சுற்றறிக்கையில் 3.1 பந்தி பிரகாரம் ஒவ்வொரு 06 மாதத்திற்கும் ஒரு முறை எரிபொருள் செலவழிவை பரிசோதனை செய்தல் வேண்டுமாயினும், 16 வாகனங்களின் பொருட்டு அவ்வாறு மேற்கொள்ளப்படவில்லை.

**(ஆ) செயலற்ற மற்றும் குறை பயன்பாட்டுகளுடன் கூடிய பயன்பாட்டு சொத்துக்கள்**

பழைய ஆவணக்கூடக் கட்டிடத்தில் ஒரு பக்கம் சரிவடைதல் காரணமாக 2012 ஆம் ஆண்டு தொடக்கம் அதனை பயன்பாட்டிலிருந்து அகற்றப்பட்டிருந்தது. இந்தக் கட்டிடத்தை மீண்டும் புனரமைப்பு செய்து பயன்படுத்துவதற்கோ உடைத்து அகற்றுவதற்கோ நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை.

**(இ) பிற நிறுவனங்களுக்கரிய சொத்துக்களை முறையற்ற வகையில் பயன்படுத்தல்**

இலங்கை போக்குவரத்து சபைக்குரிய வேரஹரயில் 10.995 ஏக்கர் காணி, கருத்திட்ட முகாமைத்துவம் மற்றும் மேற்பார்வை திணைக்களத்திற்குரிய வாகனமொன்றை முறையாக கையேற்கப்படாமல் திணைக்களத்தால் பயன்படுத்தப்பட்டிருந்தது.

**2.4 கருத்து முரண்பாடுகளை எதிர் நோக்கும் கொடுக்கல்வாங்கல்**

2016 திசெம்பர் மாதம் வழங்கப்பட்ட ரூபா.2,017,660 மற்றும் ரூபா.22,784,104 பெறுமதியிலான 02 காசோலைகள் 2017 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் வரை வங்கியிடம் செலுத்துவதற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. பெறுமதி ரூபா.22,784,104 ஆன காசோலை இரத்துச் செய்யப்பட்டு இரண்டு காசோலைகளை மோட்டார் வாகன போக்குவரத்து ஆணையாளர் நாயகத்தின் பெயருக்கும் சம்பந்தப்பட்ட பணம் பெறுபவரின் பெயரிலும் வழங்கப்பட்டிருந்தது. காசோலை பெறுநரின் 02 காசோலைகள் 2017 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் செலுத்துவதற்காக வங்கியிடம் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. காசோலைகளை எழுதி ஓராண்டு காலம் தம் வசம் வைத்திருத்தல் கருத்து முரண்பாடுக்கு காரணமாக அமைந்திருந்தது.

**2.5 நிதி முறைகேடுகள் தன்மையிலான கொடுக்கல்வாங்கல்**

மாதிரி கணக்காய்வு பரிசோதனையில் அவதானிக்கப்பட்ட மோசடி தன்மையிலான கொடுக்கல்வாங்கள் பற்றிய விபரங்கள் பின்வருமாறாகும்.

(அ) வாகனங்களை பதிவு செய்வதற்கு 2002 ஆம் ஆண்டில் இலக்கங்களுக்குப் பதிலாக ஆங்கில எழுத்துக்களுடன்கூடிய இலக்கம் வழங்கப்பட்டிருந்தது. அந்த சந்தர்ப்பத்தில் 302 இலக்க தொகுதிக்குரிய 45 இலக்கங்களின் பொருட்டு வாகனங்களை பதிவு செய்யாது கணினி முறைமையில் இருப்பதற்கு விடப்பட்டிருந்தது. 2013 ஆம் ஆண்டில் இது தொடரபாக அறிவுறத்தப்படினும், தேவையான நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை. பின்னர் அந்த 10 இலக்கங்களின் பொருட்டு வாகனங்களை பதிவு செய்திருந்ததுடன், அந்த வாகனங்கள் சட்டரீதியான முறையில் இறக்குமதி செய்யப்பட்ட வாகனங்களா அல்லது சட்ட ரீதியற்ற முறையில் இறக்குமதி செய்யப்பட்ட வாகனங்களா இல்லாவிட்டால் இலங்கையில் மீள்பொருத்திய வாகனங்களா என்பது தொடர்பாக சுங்கத்தால் அடையாளம் காணப்படவில்லை. 10 வாகனங்களின் கடிதக்கோவைகள் கணக்காய்விடம் சமர்ப்பிக்கப்படவில்லையென்பதுடன், அதில் 02 வாகனங்கள் அரைசொகுசுவரி அறவிடப்படாத வாகனங்களாகும். அந்த இரண்டு வாகனங்களின் பொருட்டு 07 ஆண்டுகளுக்கு ரூபா 367,500 ம் சொகுசு வரி அறிவிட வேண்டும்.

(i) அந்த வாகனங்களின் 10 இலக்கங்களுக்கு ஏற்படையதாக வருடாந்தம் பெற்றுக்கொள்ள வேண்டிய வருமான அனுமதிப் பத்திரம் வழங்கப்பட்டுள்ள முறை தொடர்பாக பரிசோதனை செய்கையில் பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

| வாகன இலக்கம் | வருமான அனுமதிப் பத்திரம் பெற்றுக்கொள்ளப்பட்ட திகதி | வருமான அனுமதிப் பத்திரம் பெற்றுக்கொள்ளப்பட்ட காலவெல்லை |
| --- | --- | --- |
| 302 – 2071 | 2017.03.13 | 2000 – 2017 |
| 302 – 2022 | 2016.09.07 | |
| 302 – 0637 | 2013.06.06 | 2012 – 2017 |
| 302 – 2023 | 2015.05.12 | |
| 302 – 2024 | 2012.01.30 | |
| 302 – 2026 | 2015.10.23 | |
| 302 – 2027 | 2014.02.05 | |
| 302 – 2033 | | வருமான அனுமதிப் பத்திரம் பெற்றுக்கொள்ளப்படவில்லை. |
| 302 – 0514 | 2017.05.04 | 2008 – 2018 |

(ii) மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களத்தின் நடைமுறை திட்டம்படி வாகனமொன்றின் உரிமை மாற்றத்தின் போது, அந்த வாகனத்தை மாற்றும் செய்யும் திகதிக்கு ஏற்புடையதான வருமான அனுமதிப் பத்திரம் சமரப்பிக்கப்பட வேண்டுமாயினும், அவ்வாறு மேற்கொள்ளாதபோது உரிமை மாற்றம் செய்யப்பட்டிருந்தது. உரிமை மாற்றம் 2015 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 04 ஆந் திகதி மேற்கொள்ளப்பட்ட போதிலும், 2000 ம் தொடக்கம் 2017 ஆம் ஆண்டு வரைக்கான வருமான அனுமதிப்பத்திரம், 2016 ஆம் ஆண்டு செப்தெம்பர் 07 ஆந் திகதி பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது.

(ஆ) இலங்கை சுங்கத்தால் திணைக்களத்திடம் அனுப்பியிருந்த பிழையான செசி இலக்கத்திற்காக, தவறான சுங்க பதிவுகளை பயன்படுத்தி 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளில் 07 வாகனங்களை பதிவு செய்யப்பட்டிருந்தது. 07 வாகன கடிதக்கோவைகளில் 05 கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை என்பதுடன், சமர்ப்பிக்கப்பட்ட 02 வாகன கடிதக்கோவைகளின்படி பதிவுகளின் பொருட்டு தவறான சுங்க குறிப்புகளை பயன்படுத்தப்பட்டிருந்தது. இந்த வாகனங்கள் 2008, 2010 மற்றும் 2011 ஆண்டுகளில் இறக்குமதி செய்யப்பட்டிருப்பினும், திணைக்களத்தால் 2012, 2013 மற்றும் 2014 ஆக மாற்றம் செய்யப்பட்டிருந்தது. இதனால் அரசாங்கத்திற்கு 13.5 மில்லியன் ரூபா தொகைக்கு அண்மித்த வரி தொகை கிடைக்கப்பெறவில்லை. இந்த நிலைமைக்கு திணைக்களத்தின் கணினி முறைமையில் உள்ள குறைப்பாடுகள் காரணமாக இருந்தன.

(இ) G,H,J, ஆகிய எழுத்து தொகுதியின் கீழ் பதிவு செய்யப்பட்ட மோட்டார் சைக்கிள் இலக்கங்களுக்கு, ப்ராடோ வண்டிகளுக்கு ஏற்புடையதான தகவல்களை கணினி முறைமையில் உள்ளடக்கப்பட்டு தவறான முறையில் வாகனங்களை பதிவு செய்திருந்த சந்தர்ப்பங்கள் கணக்காய்வில் அவதானிக்கப்பட்டன. அத் தகவல்களை ஒப்பிடுவதற்காக G,H,J எழுத்துக்கள் மற்றும் 65, 300, 254, 63, 61, 62, 32 ஆகிய இலக்கங்களின் தொகுதிகளுக்கு ஏற்புடையதாக பதிவு செய்யப்பட்ட வாகனங்களின் தகவல்களை கணக்காய்வில் கோரப்பட்டிருப்பினும், தற்போது அந்த தகவல்கள் சமர்ப்பிக்கப்படவில்லை.

## 2.6 தீர்க்கப்படாதிருந்த கணக்காய்வு பந்திகள்

திணைக்களத்திற்கு ஏற்புடையதாக கணக்காய்வாளர் அதிபதியின் அறிக்கைகளில் உள்ளடக்கப்பட்டிருந்த, கணக்காய்வு பந்திகளில் சுட்டிக் காட்டிய குறைப்பாடுகள் தொடர்பில் திணைக்களத்தால் சரி செய்யப்படாத பந்திகளின் தொடர்கள் பின்வருமாறாகும்.

| | கணக்காய்வு அதிபதி அறிக்கையின் தொடர்கள் | | சம்பந்தப்பட்ட விடயம் |
|---|---|---|---|
| | ஆண்டு | பந்தி இலக்கம் | |
| (அ) | 2014 | 5.13 (அ) | முறையற்ற வகையில் வாகனங்களில் மேற்கொள்கின்ற மாற்றங்கள் தொடர்பில் நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் மற்றும் எதிர்கால நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் |
| (ஆ) | 2016 | 3.9 (ஈ) | மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களத்தின் கணினி முறைமை தொடர்பில், சுங்க திணைக்களத்தின் தகவல் தொடர்புகள்மூலம் மோட்டார் வாகனங்களின் புதிய பதிவுக்கு எற்புடையதான தரவுகளை நேரடியாக பரிசோதனை செய்வதற்கு முடியுமானவாறு கணினி முறைமையில் தயாரிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படாமை. |

## 2.7 முகாமைத்துவ குறைப்பாடுகள்

### 2.7.1 சாரதி அனுமதிப் பத்திரங்களை வழங்குதல்

2009 மார்ச் 27 ஆந் திகதி தொடக்கம் 2017 திசெம்பர் 31 ஆந் திகதி வரை ஸ்மார்ட் காட் சாரதி அனுமதிப்பத்திரங்கள் 4,677,585 ஐ அச்சிடுவதற்கு 7467 மில்லியன் ரூபா செலுத்தல் தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2009 ஆம் ஆண்டில் சம்பந்தப்பட்ட வழங்குநருடன் மேற்கொண்ட ஒப்பந்த உடன்படிக்கை பிரகாரம், அதன் 07 ஆண்டு கால உடன்படிக்கைபடி 2016 ஆம் ஆண்டு மார்ச் 26 ஆந் திகதி முடிவடைந்திருந்தது. அதன்படி சாரதி அனுமதிப்பத்திரங்கள் வழங்குவதற்கு ஏற்புடையதாக ஒப்பந்தக்காரர்களுக்குரிய எல்லா சொத்துக்கள் மற்றம் சாரதி அனுமதிப் பத்திரங்கள் வழங்கும் நடைமுறையினை திணைக்களத்திடம் கையேற்கப்பட்டு, அந்த கையேற்கப்பட்ட திகதி தொடக்கம் இந்த அனைத்து நடவடிக்கைகளையும் திணைக்களத்தால் மேற்கொள்ளுதல் வேண்டும். ஆயினும், இதுவரை அதன்படி நடவடிக்கை மேற்கொண்டிருக்கவில்லை.

(ஆ) ஒப்பந்த உடன்படிக்கை நடைமுறைப்படுத்தி பேணிச் செல்லுதல் BOT அடிப்படையில் மேற்கொள்ளப்படுவதால் சாரதி அனுமதிப் பத்திரத்தின் விலை தீர்மானிக்கும்போது நிருமாணிப்பு, (Build) நடைமுறைப்படுத்தி பேணிச் செல்லுதல் (Operate), மாற்றுதல் (Transfer) என்பவற்றுக்கான செலவுகளும் அதில் உள்ளடங்கும். மாற்றுதல்களை (Transfer) மேற்கொள்ளப்படாமை காரணமாக இது வரை ஒப்பந்தக்காரருக்கு செலுத்தப்பட்ட பணத்தில் உள்ளடங்கும் மேற்படி செலவு பலனற்ற செலவாக காணப்பட்டது. மேலும் 2016 ஆம் ஆண்டு ஏப்ரல் 01 ஆந் திகதி தொடக்கம் திணைக்களத்திற்குரியதாக வேண்டிய, மேற்படி சொத்துக்களை பயன்படுத்திய ஒப்பந்தக்காரரிடமிருந்து எதுவித தொகையும் திணைக்களத்திடம் அறவிடுவதற்கு நடவடிக்கை மேற்கொண்டிருக்கவில்லை.

(இ) சாரதி அனுமதிப்பத்திரங்களின் முகாமைத்துவ முறைமை (Driving License Management System) நடைமுறைப்படுத்தும் செயற்பாட்டினை திணைக்களத்து அலுவலர்கள் மேற்பார்வை செய்திருக்கவில்லை.

(ஈ) ஒப்பந்த உடன்படிக்கையில் 3.4.20 பிரிவு பிரகாரம் திணைக்களத்தின் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பப் (ICT) பிரிவின் அலுவலர்களுக்கு முகாமைத்துவ

முறைமை தொடர்பாகவும். அந்த முறைமையை நடைமுறைப்படுத்தும்போது ஏற்படும் பிரச்சினைகளை தீர்த்தல் தொடர்பாகவும், (Trouble Shooting) முறைமை பேணுதல் தொடர்பாகவும் (System Maintenance) சிறந்த முறையில் பயிற்சி வழங்குவதற்கு இணக்கம் தெரிவித்திருப்பினும், அதன்படி பணியாற்றியிருக்கவில்லை. திணைக்களத்தாலும் சம்பந்தப்பட்ட பயிற்சியினை அலுவலர்களுக்கு வழங்குவதற்கு தேவையான நடவடிக்கை மேற்கொண்டிருக்கவில்லை.

(இ) உடன்படிக்கை பிரகாரம் 1989 ஆம் ஆண்டுக்கு முன்னர் வழங்கப்பட்டுள்ள பழைய சாரதி அனுமதிப் பத்திரங்களை, புதிய சாரதி அனுமதிப் பத்திரங்கள் வழங்கும் கணினி முறைமையில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. இதன் காரணமாக பொய்யான சான்றிதழ்களை சமர்ப்பித்து எழுத்திலான மற்றும் நடைமுறை பரீட்சைகளுக்கு தோற்றாது புதிய ஸ்மார்ட் சாரதி அனுமதிப் பத்திரங்களை பெற்றுக்கொள்ளும் வாய்ப்பும் உள்ளதாக அவதானிக்கப்பட்டது.

(ஈ) சாரதி அனுமதிப் பத்திரங்களில் தரத்தினை பரிசோதனை செய்வதற்காக உடன்படிக்கை மேற்கொண்டிருப்பினும், அதனை மேற்கொள்ளவில்லையென்பதுடன், திணைக்களத்தாலும் அதனை செய்திருக்கவில்லை.

(உ) ஸ்மார்ட் காட் சாரதி அனுமதிப் பத்திரங்கள் அச்சிடுவதனை திணைக்களம் ஆரம்பித்த 2009 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் தற்போது விடயவெல்லை எளிதாகுதல் காரணமாக உற்பத்தி செலவு குறைவடைய வேண்டுமென்பதுடன். நிதி மற்றும் வெகுசன ஊடாக அமைச்சினால் இது தொடர்பாக அரச கணக்கு செயற்குழுவிடம் சமர்ப்பித்த அறிக்கை படியும், அது ரூபா 300 ஆன தொகைக்கு மேற்கொள்ள முடியுமென சுட்டிக்காட்டப்பட்டிருந்தது. ஆயினும் திணைக்களம் காலத்திற்கேற்றவாறு உடன்படிக்கையை புதுப்பிக்காது 2009 ஆம் ஆண்டில் உடன்படிக்கை மேற்கொண்ட ரூபா.1340 ஆன பணத் தொகைக்கு ஒப்பந்தக்காரரிடம் வழங்கப்பட்டிருந்தது. காலத்திற்கேற்றவாறு விலை கேள்விகளை மேற்கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொண்டிருக்கவில்லை.

(ஊ) புதிய தொழில்நுட்பம்படி தயாரித்துள்ள ஸ்மார்ட் காட் அட்டை வாசிப்பதற்கு தேவையான இயந்திரங்களை சட்டத்தை நடைமுறைப்படுத்தும் பிரிவுகளுக்கு வழங்கப்படாமையால், எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்களை நிறைவேற்றிக்கொள்வதற்கு முடியாதிருந்தது.

**2.7.2 வாகனங்களின் எண் தகடுகளை வழங்குதல்**

இது தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) வாகனங்களுக்கான எண் தகடுகளை வழங்கும் உடன்படிக்கை 2015 ஆம் ஆண்டு ஏப்பிரல் 29 ஆந் திகதியில் முடிவடைந்திருந்ததுடன், பெறுகை நடவடிக்கைகள் உரிய திகதிகளில் மேற்கொள்ளப்படாமை மற்றும் மேற்கொண்ட பெறுகைகளை இரத்துச் செய்தல் காரணமாக 2015 ஆம் ஆண்டுக்கு ஒப்பந்தம் வழங்கிய நிறுவனத்திற்கே 2018 ஆம் ஆண்டு மார்ச் 31 ஆந் திகதி வரை 05 சந்தர்ப்பங்களில் நீடிக்கப்பட்டிருந்தது. 2016 ஆம் ஆண்டு நவம்பர் 16 ஆந் திகதி விலை கேள்வி மேற்கொண்ட சந்தர்ப்பத்தில் அந்த நிறுவனம் தற்கால விலையிலும் பார்க்க நூற்றுக்கு 23 சதவீதத்தில் குறைவாக விலை கோரல் சமர்ப்பித்திருந்தது. இதனை அடிப்படையாகக்கொண்டு காலத்தை நீடிப்பதற்கு இணக்கப்பாட்டுக்கு வருவதற்கு நடவடிக்கை மேற்கொண்டிருக்கவில்லை.

(ஆ) 2,000,000 ம் அளவு ஆங்கில எழுத்துக்கள் இல்லாத வாகனங்களின் பொருட்டு எண் தகடுகளை வழங்கும் முறைமை தயாரிப்பதற்கு திணைக்களத்தால் நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை.

**2.7.3 சொகுசு வரி அறவிடும் ரிசிட் புத்தகங்கள் காணமல்போதல்**

03 காப்புறுதி நிறுவனங்களிடம் சொகுசு வாகனங்களின் பொருட்டு வரி அறவிடுவதற்கு வழங்கப்பட்ட ரிசிட் புத்தகங்கள் காணமல் போயிருந்ததுடன். காப்புறுதி நிறுவனங்களிடம் அது தொடர்பான பணம் அறவிடுவதற்கு 2018 ஆம் அண்டு ஒக்டோபர் வரை நடவடிக்கை மேற்கொண்டிருக்கவில்லை.

**2.8 பொது மக்களுக்கு சேவைகளை நிறைவேற்றுதல்**

திணைக்களத்து இணையத் தளம்மூலம் பொது மக்களுக்கு தேவையான அறிவுறுத்தல்கள் மற்றும் பொது மக்களிடமிருந்து முறைப்பாடுகளை பெற்றுக்கொள்ளும் முறைமையை மீளாய்விற்கான ஆண்டு இறுதியிலும் நடைமுறைப்படுத்தியிருக்கவில்லை.

**2.9 கடமைப் பொறுப்புகளை நிறைவேற்றுவதற்கு பாராளுமன்றத்தால் ஏற்பாடு செய்திருந்த ஒதுக்கீடுகளை பயன்படுத்தல்**

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(அ) ஒதுக்கீட்டுக் கணக்கு**

**(i) ஏற்பாடு செய்திருந்த ஒதுக்கீடுகளை பயன்படுத்தாமை.**

01 செலவு விடயத்தின் பொருட்டு ஏற்பாடு செய்திருந்த 50 மில்லியன் ரூபாவிலான மொத்த தேறிய ஒதுக்கீட்டினை பயன்படுத்தாது மொத்தமாக மிகுதியாக இருந்தது. 18 செலவு விடயங்களுக்கு ஏற்புடையதாக மொத்தம் 353 மில்லியன் ரூபா தேறிய ஒதுக்கீடுகளிலிருந்து 149 மில்லியன் ரூபாவிலான ஒதுக்கீடு எஞ்சியிருந்ததாக பதிவு செய்யப்பட்டிருந்ததுடன், அது அந்த செலவு விடயங்களில் தேறிய ஒதுக்கீடுகளிலிருந்து நூற்றுக்கு 07 தொடக்கம் 88 வரையிலான எல்லையைக் கொண்டிருந்தது.

**(ii) மிகை ஒதுக்கீடுகளை ஏற்பாடு செய்திருத்தல்**

02 செலவு விடயங்களின்கீழ் ஒதுக்கப்பட்டிருந்த ஒதுக்கீடுகளில் நிதி ஒழுங்குவிதி 66 இன்கீழ் ஏனைய செலவு விடயத்திற்கு மாற்றிய பின்னரும் நூற்றுக்க 65 மற்றும் நூற்றுக்கு 88 எஞ்சியிருந்தது. இதன்படி மிகை ஒதுக்கீடு ஏற்பாடு செய்திருந்தமை அவதானிக்கப்பட்டது.

**2.10 மதிப்பிடப்பட்ட மற்றும் உண்மையான வருமானம்**

திணைக்களத்தால் 2017 அம் ஆண்டுக்கு 04 வருமான குறியீடுகளின் பொருட்டு மொத்தம் 11,470 மில்லியன் ரூபா வருமானம் மதிப்பிடப்பட்டிருந்ததுடன், மீளாய்விற்கான ஆண்டில் மொத்தம் 10,661 மில்லியன் ரூபாவிலான வருமானம் சேகரிக்கப்பட்டிருந்தது. அது மதிப்பிடப்பட்ட வருமானத்தில் நூற்றுக்கு 93 ஆகும். விபரங்கள் பின்வருமாறாகும்.

| **வருமானக் குறியீடு** | **2017 ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆந் திகதியில்** | | | **திரட்டிய வருமானம் மதிப்பிடப்பட்ட வருமானத்தில் சதவீதமாக** |
|---|---|---|---|---|
| | **மதிப்பிடப்பட்ட வருமானம்** | **உண்மையான வருமானம்** | **விஞ்சுதல்/ (பற்றாக்குறை)** | |
| | **ரூபா.மில்லியன்** | **ரூபா.மில்லியன்** | **ரூபா.மில்லியன்** | |
| 10-03-01-00 | 1,500 | 1,287 | (213) | (85.8) |

| | | | | |
|---|---|---|---|---|
| 20-03-02-14 | 9,000 | 9,172 | 172 | 101.9 |
| 10-03-07-04 | 70 | 69 | (1) | (98.5) |
| 20-03-02-15 | 900 | 133 | (767) | (14.7) |
| | ----------- | ------------ | ---------- | --------- |
| மொத்தம் | 11,470 | 10,661 | (809) | (98) |
| | ======= | ====== | ===== | ===== |

மேற்படி குறிப்பிடப்பட்ட வருமானக் கணக்குகள் தொடர்பாக மேற்கொண்ட கணக்காய்வில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(அ) 10-03-01-00 இலக்க வருமானக் குறியீடு – சொகுசு மோட்டார் வாகன வரி வருமானம்**

---

பின்வரும் குறைப்பாடுகள் அவதானிக்கப்பட்டது.

(i) திணைக்களத்தினால் 1995 ஆம் ஆண்டு தொடக்கம் 2009 ஆண்டு வரை நிலுவை வருமான பதிவேடுகளை பேணிச் செல்லப்படவில்லை. ஆகையால் அந்த காலப் பகுதிக்கு ஏற்புடையதான நிலுவை வருமானம் எவ்வளவு என்பதை உறுதிப்படுத்த முடியவில்லை.

(ii) கணக்காய்விற்கு சமர்ப்பித்த வருமானக் கணக்குப் படி மொத்தம் 220 மில்லியன் ரூபா வருமானம் நிலுவையாக இருந்ததுடன், அந்த வருமானம் 01 ஆண்டு தொடக்கம் 08 ஆண்டு காலத்திற்கு எற்புயைடதாகியது. அந்த நிலுவை வருமானத்தை அறவிடுவதற்கு திணைக்களம் தவறியிருந்தது.

(iii) கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் சொகுசு மோட்டார் வாகனங்கள், அரைசொகுசு மோட்டார் வாகனங்கள், இரட்டை குறிக்கோள் வாகனங்களின் பதிவு ஒழுங்கு முறையாக நூற்றுக்கு 47,44 மற்றும் 13 ஆல் குறைந்திருந்தது.

**(ஆ) 10-03-07-04 ஆம் இலக்க வருமான குறியீடு - மோட்டார் வாகனங்களின் விற்பனை மீதான வரி வருமானம்.**

---

வாகனங்களில் முதல் பதிவு உரிமையாளரால் அந்த வாகனத்தின் உரிமை மாற்றம் செய்கையில், அது தொடர்பாக மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களத்தை அறிவுறுத்தும் சந்தர்ப்பத்தில் மட்டும் இக் கட்டணம் அறவிடப்பட முடியுமாயினும், அவ்வாறு அறிவுறுத்தப்படாது உரிமை மாற்றும் மேற்கொள்ளும் சந்தர்ப்பத்தில் அறவிடப்பட வேண்டிய வரி தொகையை அடையாளம் காணுவதற்காக முறையான நிகழ்ச்சித்திட்டமொன்றை திணைக்களம் அறிமுகப்படுத்தியிருக்கவில்லை.

**(இ) 20-03-02-15 ஆம் இலக்க வருமானக் குறியீடு – மோட்டார் வாகனங்களை மாற்றும்போது வாகன இறக்குமதி அனுமதிப் பத்திரங்களின்கீழ் அறவிடப்படும் கட்டணங்களின் வருமானம்.**

---

அடிப்படை மதிப்பீட்டின் படி மீளாய்விற்கான ஆண்டில் இந்த வருமானத் தலைப்பின்கீழ் எதிர் பார்கக்ப்பட்ட வருமானம் 900 ம் மில்லியன் ரூபா ஆனதுடன், உண்மையாக உழைக்கப்பட்டுள்ள வருமானம் 133 மில்லியன் ரூபாவாகும். அதன்படி மதிப்பிடப்பட்ட வருமானத்திலும் பார்க்க உழைக்கப்பட்டுள்ள வருமானம் 133 மில்லியன் ரூபாவாகும். அதன்படி மதிப்பிடப்பட்ட வருமானத்திலும் பார்க்க உண்மையான வருமானம் நூற்றுக்கு 85 ஆல் குறைந்திருந்தது.

## 2.11 அரசாங்க அலுவலர்களின் முற்பணக் கணக்கு

**பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள்**

திணைக்களத்திற்கு எற்புடையதான விடய இலக்கம் 30701 இன்கீழ் அரசாங்க அலுவலர்களுக்கு முற்பணக் கணக்கின் பொருட்டு பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள் மற்றும் உண்மையான பெறுமதிகள் பின்வரும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன.

| செலவினம் | | கிடைக்கப்பெறுதல் | | பற்று மீதி | |
|---|---|---|---|---|---|
| ஆகக் கூடிய எல்லை | உண்மையான | ஆகக் குறைந்த எல்லை | உண்மையான | ஆகக் கூடிய எல்லை | உண்மையான |
| ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் |
| 31.00 | 30.90 | 22 | 22.68 | 155 | 116 |

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

**நிலுவை கடன் மீதிகளை அறவிடப்படாமை**

கணக்காய்விற்கு சமர்ப்பித்த கணக்கிணக்கக் கூற்று பிரகாரம் அன்றைய திகதியில் அறவிடுவதற்கிருந்த மீதிகளின் மொத்தம் இடம் மாற்றம் பெற்றுச் சென்றிருந்த அலுவலர்களின் கடன் மீது தவிர்ந்த ரூபா. 3,282,754 ஆவதுடன். அந்த நிலுவை மீதி ஓராண்டு தொடக்கம் 28 ஆண்டு வரையிலான காலவெல்லைக்குள் இருந்து வந்த போதிலும், அந்த நிலுவை கடன் மீதியை அறவிடுவதற்கு திணைக்களம் தவறியிருந்தது.

## 2.12 பொது வைப்புக் கணக்கு

திணைக்களத்தின் கீழ் 06 பொது வைப்புக் கணக்குகளில் 2017 ஆம் ஆண்டு தொடக்கம் திசெம்பர் 31 ஆந் திகதியில் மீதிகளின் மொத்தம் 322 மில்லயின் ரூபாவாகும். 02 ஆண்டுகள் கடந்த பின்னர் மொத்தம் ரூபா 21 மில்லியன் ரூபாவிலான 32 வைப்புகள் தொடர்பில் நிதி ஒழுங்குவிதி 571 பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை.

## 2.13 ஆவணப் பதிவேடுகள் மற்றும் புத்தகங்களை பேணிச் செல்லப்படாமை

திணைக்களத்தால் பின்வரும் ஆவணப் பதிவேடுகளை பேணிச் செல்லப்படவில்லையென்பதுடன், சில ஆவணங்களை முறையாகவும் இற்றைப்படுத்தியும் பேணிச்செல்லப்படவில்லையென மாதிரி கணக்காய்வு பரிசோதனையின்போது அவதானிக்கப்பட்டது.

| | ஆவணங்களின் வகை | சம்பந்தப்பட்ட ஒழுங்குவிதி | அவதானிப்புகள் |
|---|---|---|---|
| (அ) | நிலையான சொத்துக்களின் பதிவேடு | 1978 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 19 ஆந் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரி சுற்றறிக்கை /நிதி ஒழுங்குவிதி 502(2) பிரகாரம் அதில் 11 ஆவது பின்னிணைப்பு. | இற்றைப்படுத்தப்படவில்லை. மேலும், திணைக்களம் கொள்வனவு செய்த 17 கொள்கலன்களை நிலையான சொத்துக்கள் பதிவேட்டில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | கணினி துணைகருவிகள் மற்றும் மென்பொருள் தொடர்பாக நிலையான சொத்துக்களின் பதிவேடு | 2002 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 28 ஆந் திகதிய அய்ஏஅய்/2002/02 திறைசேரி சுற்றறிக்கை | இற்றைப்படுத்தப்படவில்லை. |
| (இ) | உத்தியோகபூர்வ தொலைபேசி பதிவேடு | நிதி ஒழுங்குவிதி 845(1) | இற்றைப்படுத்தப்படவில்லை |
| (ஈ) | மின்சார உபகரணங்கள் தொடர்பான பதிவேடு | நிதி ஒழுங்குவிதி 454(2) | பதிவேடு பேணப்படவில்லை |

### 2.14 இணங்கியொழுகாமை

#### 2.14.1 சட்டங்கள், விதிகள் மற்றும் ஒழுங்கவிதிகள் என்பவற்றுக்கு இணங்கியொழுகாமை

மாதிரி கணக்காய்வு பரிசோதனைகளின்போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் ஒழுங்குவிதிகள் என்பவற்றின் ஏற்பாடுகளுக்கு இணங்கியொழுகாத சந்தர்ப்பங்கள் பின்வருமாறாகும்.

| **சட்டங்கள், விதிகள் மற்றும் ஒழலங்குவிதிகளின் தொடர்** | **இணங்கியொழுகாமை** |
|---|---|
| **(அ) இலங்கை சனநாயக சோசலிசக் கடியரசின் நிதி ஒழுங்குவிதிக் கோவை** | |
| நிதி ஒழுங்குவிதி 1646 | எல்லா வாகனங்களிலும் நாளாந்த ஓட்டக் குறிப்புகள் மற்றும் மாதாந்த சாராம்சங்கள் சமர்ப்பிக்கப்படும் மாதத்திற்கு பின்னரான மாதத்தில் 15 ஆந் திகதிக்கு முன்னர் சமர்ப்பிக்கப்பட வேண்டுமாயினும், 05 வாகனங்களில் நாளாந்த ஓட்டக் குறிப்புகள் மற்றும் மாதாந்த சாராம்சம் 2012 ஆம் ஆண்டு தொடக்கம் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) 2004 பெப்ருவரி 20 ஆந் திகதிய 402(1) ஆம் இலக்க அரச நிதி சுற்றறிக்கையில் 3 மற்றும் 4 ஆவது பந்திகள் | 2004 ஆம் ஆண்டு சனவரி 1 ஆந் திகதியின் பின்னர் கொள்வனவு செய்யப்பட்ட சொத்துக்கள் தொடர்பான விபரங்கள் உள்ளடக்கிய அறிக்கையினை அரையாண்டுக்கொருமுறை அரச நிதி திணைக்களத்திடம் பிரதி சகிதம் அரச கணக்கு திணைக்களத்திடம் சமர்ப்பிக்கப்பட வேண்டுமாயினும், அதன்படி நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை. |

| | | |
|---|---|---|
| (இ) | 2013 ஆம் ஆண்டு யூலை மாதம் 12 ஆந் திகதிய எஸ்ஏ/ஏஎஸ்/ஏஏ ஆம் இலக்க அரச கணககு சுற்றறிக்கை | உரியவாறு நிறுவனத்திற்குரிய காணிகள், கட்டிடங்கள் மற்றும் ஏனைய சொத்துக்களை மதிப்பிடும் பணியை மீளாய்விற்கான ஆண்டு இறுதி வரையும் மேற்கொண்டிருக்கவில்லை. |
| **(ஈ)** | **ஏனைய சுற்றறிக்கைகள் மற்றும் வர்த்தமானி அறிவிப்புகள்** | |
| (i) | 2015 ஆம் ஆண்டு நவம்பர் 02 அந் திகதிய 1939/4 இலக்க அதிவிசேட வர்த்தமானியில் உள்ளடக்கப்பட்டுள்ள 2015 ஆம் ஆண்டு 01 ஆம் இலக்க மோட்டார் வாகன கட்டளை இலக்கம் 01 | ஒவ்வொரு சாரதி பாடசாலையும் மோட்டார் வாகன திணைக்களத்தின் பதிவு செய்யப்பட வேண்டுமாயினும், பரிசோதனை செய்யப்பட்ட 21 பாடசாலைகளில், 06 சாரதி பாடசாலைகள் பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை. |
| (ii) | 2016 ஆம் ஆண்டு யூன் மாதம் 08 ஆந் திகதிய 02/2016 (i) ஆம் இலக்க திணைக்களத்து சுற்றறிக்கை | திணைக்களத்தின் கணினி முறைமையில் உள்ள சுங்க தகவல்கள் மற்றும் விண்ணப்பத்தில் உள்ள தகவல்கள் என்பவற்றுக்கிடையில் ஒப்பிட்டு பார்க்காது மோட்டார் சைக்கிள்களை பதிவு செய்திருந்த சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன. |

## 2.15 உள்ளக கணக்காய்வு

உள்ளக கணக்காய்வின் தரநியமங்கள் மற்றும் நெறிமுறைமைகள் 1230 இற்கு அமைவாக உள்ளக கணக்காய்வாளர்களால் தொடர்ச்சியாக தமது தொழில்சார் அபிவிருத்தி அறிவு, திறமை மற்றும் எனைய ஆற்றல்களை மேம்படுத்திக் கொள்ளுதல் வேண்டுமாயினும், திணைக்களத்தால் மீளாய்விற்கான ஆண்டில் இதற்காக முறையான நிகழ்ச்சித்திட்டம் அறிமுகப்படுத்தவில்லை.

## 2.16 மனிதவள முகாமைத்துவம்

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணி, உண்யைமான பதவியணி மற்றும் ஆளுக்குரிய வேதனாதிகள்**

திணைக்களத்தின் கடமைப் பொறுப்புகளை நிறைவேற்றுவதற்காக 2017 ஆம் ஆண்டு திசெம்பர் 31 அந் திகதியில் அங்கீகரிக்கப்பட்ட, உண்மையான, வெற்றிட மற்றும் மிகை பதவியணி தொடர்பான விபரங்கள் பின்வருமாறாகும். மீளாய்விற்கான ஆண்டின் பொருட்டு திணைக்களத்தால் ஆளுக்குரிய வேதனாதிகளின் செலவு தொகுதியின் கீழ் ரூபா 427,576,870 செலவிடப்பட்டிருந்தது. அதன்படி தனி நபர் செலவு ரூபா. 483,684 ஆக காணப்பட்டது.

| பதவியணி வகை | | அங்கீகரிக்கப்பட்ட பதவியணி | உண்யைமான எண்ணிக்கை | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேட்ட மட்டம் | 29 | 29 | - |
| (ii) | மூன்றாம் நிலை மட்டம் | 23 | 06 | 17 |
| (iii) | இரண்டாம் நிலை மட்டம் | 796 | 729 | 67 |
| (iv) | ஆரம்ப மட்டம் | 128 | 120 | 08 |

| | | | | |
|---|---|---|---|---|
| (v) | அமைய / ஒப்பந்தம் | - | - | - |
| | மொத்தம் | 976 | 884 | 92 |

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2012 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 30 அந் திகதிய 05/2012 ஆம் இலக்க திணைக்களத்து சுற்றறிக்கையில் 06 ஆவது பந்தி பிரகாரம் திணைக்களத்தின் அலுவலர்களை ஒரு சேவை நிலையத்தில் 05 ஆண்டுகள் சேவையாற்றிய பின்னர் கட்டாயமாக வேறு இடத்திற்கு இடமாற்றம் செய்யப்பட வேண்டுமாயினும், திணைக்களத்தின் 63 அலுவலர்கள் ஒரே இடத்தில் 10 அண்டுகளுக்கு அதிகமான காலம் சேவையாற்றியுள்ளதாக அவதானிக்கப்பட்டது.

(ஆ) மூன்றாம்நிலை மட்டத்தின் 17 அலுவலர்களின் வெற்றிடங்கள், இரண்டாம் நிலை மட்டத்தின் 67 அலுவலர்களின் வெற்றிடங்கள் மற்றும் ஆரம்ப மட்டத்தின் 08 அலுவலர்களின் வெற்றிடங்கள் இருந்தபோதிலும், அவற்றை பூர்த்தி செய்வதற்கு இதுவரை நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை.

(இ) தொழில்நுட்ப சேவை பிரிவுக்கு ஒரு உதவி ஆணையாளர் மட்டும் நியமனம் செய்யப்பட்டிருந்ததுடன், அந்த பிரிவில் உள்ள கடமைப்பொறுப்புகளின்படி அது போதுமற்றதென அவதானிக்கப்பட்டது.

**நிலைபேறுடனான அபிவிருத்தி நோக்கங்களுக்கு இணங்கியொழுகாமை.**

2017 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க நிலைபேறுடனான அபிவிருத்தி சட்டத்தில் 3.6, 3.9, 11.2 மற்றும் 11.6 ஆகிய நோக்கங்களை எய்துக்கொள்ளும் பொருட்டு தமது வளங்களை வினைத்திறனாக வழிநடாத்தப்பட வேண்டுமாயினும், இது வரை திணைக்களத்தினால் குறித்த நோக்கங்கள் எவை என்பது தொடர்பாக அடையாளம் காணப்பட்டு அவற்றை நிறைவேற்றிக்கொள்வதற்கு ஏற்புடையதான நிகழ்ச்சித்திட்டங்கள் தயாரிக்கப்படவில்லை.